சுருக்கம்

அறிவிப்பு - சமூகநீதித் துறை -2026-2027ஆம் நிதியாண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் (சமூகநீதி) அவர்களின் அறிவிப்பு - வளமிகு வேளாண் உதவித் திட்டத்தின் கீழ் 1000 ஆதிதிராவிடர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் விரைவு மின் இணைப்பு பெற செலுத்தப்படும் வைப்புத் தொகையில் 90 சதவீதம் மானியம் வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நீதித் (சிஉ_தி) துறை

அரசாணை (நிலை) எண்.83

நாள்: 16.10.2026
பராபவ, புரட்டாசி 29 -ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு-2057

படிக்கப்பட்டது:-

மேலாண்மை இயக்குநர் தாட்கோ, அவர்களின் கடித எண்.ஜி1/535/2026, நாள்.07.09.2026.

ஆணை:-

2026 – 2027 ஆம் ஆண்டிற்கான சமூகநீதித் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (சமூகநீதி) அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**ஆதிதிராவிட விவசாயிகள் மேம்பாட்டிற்காக "வளமிகு வேளாண்மை உதவித் திட்டம் உருவாக்கப்படும்"**

**ஆதிதிராவிட விவசாயிகள் உற்பத்தியை பெருக்க ஏதுவாக, 90 சதவீதம் மானியத்துடன் கூடிய விரைவு மின் இணைப்பு வழங்கும் 'வளமிகு வேளாண்மை உதவித் திட்டம்' செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 1000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.**

**இதன் மூலம், விவசாயிகள் பாசன வசதி, உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்தி, பொருளாதார மேம்பாடு அடைவார்கள்.**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 2026-2027-ஆம் நிதியாண்டில் 1000 ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு விரைவு மின் இணைப்பு திட்டத்தினை 90 சதவீதம் மானியத்துடன் தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கு ரூ.25.08 கோடி மற்றும் நிருவாக செலவினம் (4%) ரூ.1.00 கோடி என ஆக மொத்தம் ரூ.26.09 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

3. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் 2026-2027 ஆம் நிதியாண்டில் 'வளமிகு வேளாண் உதவித் திட்டத்தின்' கீழ் 1000 ஆதிதிராவிடர்

விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்துடன் கூடிய விரைவு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்திட ரூ.26,09,00,000/-க்கு (ரூபாய் இருபத்து ஆறு கோடியே ஒன்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே, பத்தி-3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்- 01- ஆதிதிராவிடர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AF விவசாயிகளுக்கு துரித மின்இணைப்பு வழங்கும் திட்டம் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
>
> IFHRMS த.தொ.கு 2225 01102 AF 30903.

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் IFHRMS-ல் காசோலை/வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:-

> K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443-00-உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 – பிற வைப்புத் தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ) – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை. 802 – வழங்குதல் -02- வட்டி பெறாதவை.
>
> (IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 801 02) (Receipt)
> (IFHRMS த.தொ.கு 8443 00 800 BY 802 02) (Outgo)

6. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.26,09,00,000/- (ரூபாய் இருபத்து ஆறு கோடியே ஒன்பது இலட்சம் மட்டும்) 2026-2027-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2026-2027-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் சிறப்பு நிகழ்வாக (SI) கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2026-2027 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில்

சேர்ப்பதற்கான வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவினையும் தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி,மிபி(ம)சிந/வ.செ.பொ-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். .

7. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்திட இணைப்பில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்த வேண்டும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும், மோட்டார் குதிரைத் திறன் மற்றும் மானியத்தொகை தேவைக்கேற்ப பயனாளிகளின் எண்ணிக்கையை மாற்றி அமைத்துக் கொள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.e-4483/நிதி(பி,மிபி(ம)சிந)/2026, நாள்.16.10.2026 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2026100675 உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டாக்டர். என்.சுப்பையன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்

இயக்குநர், (முகூபொ) ஆதிதிராவிடர் நலம், சென்னை- 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
(மேலாண்மை இயக்குநர், தாட்கோ, வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
(மேலாண்மை இயக்குநர், தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர்,சென்னை -600 009/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -600 005/8/9.
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள்,
(இயக்குநர், பழங்குடியினர் நலம் வழியாக)

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009
மாண்புமிகு சமூகநீதித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி (பி.மிபி(ம)சிந)/ வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -600 009.
சமூகநீதித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
சமூகநீதி (அநமு-1/ஆதிந-5/ப.மே-1)த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

16/10/2026

பிரிவு அலுவலர்

16/10/26

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண். 83, சமூகநீதி (சிஉதி) த்துறை, நாள்: 16.10.2026**

**ஆதிதிராவிடர் விவசாயிகள் மேம்பாட்டிற்காக வளமிகு வேளாண்மை உதவித் திட்டத்தின் கீழ் விரைவு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

ஆதிதிராவிட விவசாயிகளின் உற்பத்தியை பெருக்க ஏதுவாக 90 சதவீதம் மானியத்துடன் 10 சதவீதம் பயனாளி பங்குத்தொகையுடன் "வளமிகு வேளாண்மை உதவித் திட்டத்தின்" கீழ் விரைவு மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

**தகுதிகள்**

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் விவசாயியாக இருக்க வேண்டும்.
2. வயது வரம்பு இல்லை.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரர் ஏற்கனவே, தாட்கோ திட்டங்களின் கீழ் பயனடைந்தவராக இருக்கக்கூடாது.

**நிபந்தனைகள்**

1. நிலம் விண்ணப்பதாரருக்கு சொந்தமாக இருக்க வேண்டும்.
2. அந்நிலத்தில் கிணறு அல்லது ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் (TNPDCL) மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரரின் விண்ணப்பம் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பின் 10% பங்குத்தொகையை பயனாளி தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் மோட்டார் குதிரைத்திறனுக்கு ஏற்ப செலுத்த வேண்டும்.

**மானிய விபரம்**

(ரூபாய்)

| குதிரைத்திறன் (H.P) | 10% பயனாளி பங்குத்தொகை | 90 % மானியம் | மொத்த தொகை |
|---|---|---|---|
| 5 H.P | 25,000 | 2,25,000 | 2,50,000 |
| 7.5 H.P | 27,500 | 2,47,500 | 2,75,000 |
| 10 H.P | 30,000 | 2,70,000 | 3,00,000 |
| 15 H.P | 40,000 | 3,60,000 | 4,00,000 |

**திட்ட செயலாக்கத்திற்கான வழிமுறைகள்**

1. தாட்கோ மூலம் நிதி விடுவிக்கப்பட்ட பயனாளிகள் மின் பகிர்மானக்கழகத்தின் தள ஆய்வின் போது III A மின் இணைப்பு வைத்திருந்தால் அந்த இணைப்பினை ரத்து செய்துவிட்டு இத்திட்டத்தின் கீழ் TNPDCL மின் இணைப்பு வழங்கலாம்.
2. தாட்கோ மூலம் நிதி விடுவிக்கப்பட்ட பின் பயனாளி விண்ணப்பித்த நிலத்தின் புல எண்ணில் அமைத்துள்ள கிணற்றில் அல்லது ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லாத பட்சத்தில், அதே நபருக்கு சொந்தமாக அருகிலிருக்கும் நிலத்தில் வேறு புல எண்ணில் உள்ள கிணறு அல்லது ஆழ்துளை கிணற்றிற்கு ஏற்கனவே விண்ணப்பித்த மோட்டார் குதிரைத்திறனுக்கே மின் இணைப்பு வழங்க மாவட்ட மேலாளரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று TNPDCL மின் இணைப்பு வழங்கலாம்.
3. பயனாளி விண்ணப்பித்த நிலத்தின் புல எண்ணில் அமைத்துள்ள கிணற்றில் அல்லது ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லாத பட்சத்தில் அதே நபருக்கு சொந்தமாக அருகிலிருக்கும் நிலத்தில் வேறு புல எண்ணில் உள்ள கிணறு அல்லது ஆழ்துளை கிணற்றை மாவட்ட மேலாளர்கள் தள ஆய்வு செய்து, ஆய்வின் படி ஒப்புதல் / நிராகரிப்பு கடிதத்தை மின் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கலாம்.
4. தாட்கோ மாவட்ட மேலாளர்கள், மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து சொத்து உருவாக்கப்பட்ட புகைப்படம் மற்றும் ஆவணங்களை (Service effected Number) தாட்கோ இணையதளத்தில் உடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**//உண்மை நகல்//**

16/10/2026

**பிரிவு அலுவலர்**

16/10/26